1983 சனவரி 28]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கின்ற 10 இடங்களைப் பற்றிச் சொன்னேன். இப்போது மைய அரசு 700 விசைத்தறிகளை அமைக்க அனுமதி வழங்கியிருக்கிறது. அவை எந்த எந்த இடங்களிலே போடப்பட இருக்கின்றன என்பதைப்பற்றி சொல்லவில்லை, இடங்கள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன. கோவை மாவட்டமா அல்லது எந்த மாவட்டம் என்று முடிவாகவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் தனித்தனியாக தனியார்களுக்குக் கொடுத்து அவர்கள் அதை வைத்துக்கொண்டு, பெரிய முதலாளிகள் அந்த நெசவாளர்களை சுரண்டாதவண்ணம் நாம் ஒரு காம்ப்ளக்ஸாக 100, 50 தறிகள் என்ற அடிப்படையில் உரிமங்கள் அவர்களுக்குக் கொடுத்து விசைத்தறிகள் கூட்டம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதிலே சுரண்டுவதற்கோ அல்லது தவறுதலாக பயன்படுத்துவதற்கோ வாய்ப்புகள் இல்லை.

உதகமண்டலத்திலுள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை.

* வினா எண் 38—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் விரிவாக்கமான கலர் போட்டோ பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழகத்திலேயே ஆரம்பிக்க வற்புறுத்தி மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ மற்றும் ஆ) உதகமண்டலத்தில் உள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் கலர் போட்டோ பிலிம் தயாரிக்கும் விரிவாக்கத் திட்டம் சுமார் 150 கோடி ரூபாய் அளவில் தமிழகத்திலேயே துவக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசு தொழிலமைச்சர் மற்றும் பிரதம மந்திரி ஆகியவர்களுக்கு நேர்முகக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. மேலும் தமிழக முன்னாள் ஆளுநர் திரு சாதிக் அலி அவர்களும் மத்திய தொழில் அமைச்சருக்கு அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த விண்ணப்பத்தையும் இணைத்து மேற்படித் திட்டம் தமிழ்நாட்டில் நிறுவப்பட வேண்டுமென்று வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்கு ஒரு தந்தியும் அனுப்பியுள்ளார். முதலமைச்சர்

அவர்களுடைய கடிதத்தையும் நான் நேரடியாக பிரதமரிடத்திலே கொண்டுபோய் கொடுத்து இந்தத் திட்டம் தமிழகத்திலே வரவேண்டுமென்று நேரிலே வலியுறுத்தியிருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே இந்த பிலிம் தொழிற்சாலை தமிழகத்திற்குத் தேவையென்பதை அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் மத்திய தொழில் அமைச்சருக்கும் பிரதம அமைச்சருக்கும் கடிதங்கள் எழுதியதாகவும் தந்தி கொடுத்ததாகவும் சொல்கிறார்கள் அவர்களிடமிருந்து ஏதாவது பதில் வந்ததா? நம்முடைய அமைச்சருக்கு அது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே ஏற்கெனவே இதுபற்றி சொன்னதோடு மட்டுமல்லாமல் நம்முடைய ஆளுநர் மூலமாக ஆளுநர் உரையிலேயும் இப்போதும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் அந்தத் தொகுதியின் உறுப்பினராக இருக்கிறவரும் இதற்கான ஒரு வினாவை அங்கே கேட்டிருக்கிறார்கள். மைய அரசிடமிருந்து நமக்கு அது பரிசீலனையில் இருக்கிறது என்றும் முடிவு எடுக்கிற போது தமிழகத்திற்கு முன்னுரிமை கொடுத்து முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்ட கடிதங்கள் ஏற்கெனவே வந்திருக்கின்றன. நம்பிக்கை இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை இருக்கிற காரணத்தினால்தான் தொடர்ந்து அதை நாம் வலியுறுத்திக்கொண்டு இருக்கிறோம். மனப்பூர்வமாக இன்னும் நம்புவோம். கிடைக்கும் என்று நம்புவோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலை விரிவாக்கத்தை தமிழ்நாட்டிலிருந்து வேறு மாநிலத்தில் நிறுவ வேண்டும் என்பதைப் போல மற்றைய தொழில்களில் இருக்கிற விரிவாக்கம் எவையேனும் தமிழ்நாட்டிலே இருக்க வேண்டியவைகளை வேறு மாநிலத்தில் நிறுவ மத்திய அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி மூலக்கேள்வியோடு நேரடியாக சம்பந்தப்பட்ட கேள்வி இல்லை என்றாலும் கூட நேற்றைய தினம் சட்டமன்றத்தில் 45 நிமிடங்களுக்கு மேல் செலவிடப்

பட்டிருக்கிறது என்ற காரணத்தால் அதுபற்றி நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை விரிவாக்கம் பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது பிரதமர் அவர்கள் குறுக்கிட்டு அது இன்னும் முடிவாகவில்லை என்றும், பரிசீலனையில் தான் இருக்கிறது என்றும் சொல்லி, தமிழ்நாடு அரசினுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதுபோல பதில் சொல்லி, அதுவும் கூட பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. உங்களுக்குத் தெரியும். வேறு மாநிலங்களுக்கு செல்லுமாறு மைய அமைச்சர்கள் வற்புறுத்துகிறார்களா ? கேட்டுக்கொண்டிருக்கிறார்களா ? என்பதான வாதம் நேற்று நடந்தது. மைய அமைச்சர் திவாரி அவர்கள் சொல்லுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தார். எந்தத் தொழிற்சாலை என்று சொல்லுங்கள் என்று கேட்டிருந்தார்கள். தொழில் அதிபர்கள் அங்கே போய் லைசென்ஸ் பெறுவதற்கு தொழில் அமைச்சரைத்தான் பார்ப்பார்கள், இதில் ஒன்றும் இரகசியம் இல்லை. எந்தெந்த பிரமுகர்கள் போனார்கள், எந்த எந்த தொழிற்சாலைகள் அப்படி வேறு மாநிலத்திற்குபோகும்படி கேட்கப்பட்டது என்ற விவரத்தைச் சொல்வது சரியாக இருக்காது. யார் யார் போனார்கள், யார் யார் எல்லாம் வற்புறுத்தினார்கள் என்று சொல்லி ஏற்கெனவே தொழில் நடத்திக்கொண்டிருக்கிற தொழிற் அதிபர்களை நாம் கஷ்டத்தில் மாட்டிவிடக் கூடாது என்றேன்.

திரு துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது இங்கே சொல்லுங்கள், நாங்கள் டெல்லியிலே போய் பேசுகிறோம், கொண்டு வருவதற்கு வழி செய்கிறோம் என்று சொல்லியிருந்தார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த கேள்வியை இன்றைக்கு எடுக்க வேண்டாம் என்று இருந்தேன். நேற்றே இது பற்றியெல்லாம் பேசியாகிவிட்டது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை தமிழகத்திற்கு கிடைக்கும் என்று நம்பிக்கை இருப்பதாக மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு நன்றி. இது எப்படியும் நமக்கு கிடைத்தே ஆகவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இதை மறுபடியும் இந்திய பிரதமரிடம் வற்புறுத்த தமிழகத்திலே இருந்து சர்வகட்சி தலைவர்களை அழைத்துக்கொண்டு சென்று வற்புறுத்த அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையில் இந்தத் தொழிற்சாலை இங்கு அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு சட்ட மன்றத்தில் ஆதரித்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே அது எல்லாக் கட்சிகளும் சேர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறது என்பதின் அடையாளம் தான். மீண்டும் தொடர்ந்து பிரதமருக்கு எழுதிக்கொண்டிருக்கிறோம்; எழுதுவோம். உங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்தித்து வற்புறுத்துவார்களேயானால் அது நமக்கு உதவியாக இருக்கும்.

(முற்பகல் 10-00)

1980–1981 ஆம் ஆண்டில் தீண்டாமைக் குற்றத்துக்காகத் தொடுக்கப்பட்ட வழக்குகள்.

*வினா எண் 39—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமைக் குற்றத்துக்காக 1980–1981 ஆம் ஆண்டில் தமிழகத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) எத்தனை வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தமிழகத்தில் 1980–81 ஆம் ஆண்டில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,996.

(ஆ) தண்டனை வழங்கப்பட்டவை 148.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,996 என்றும் தண்டனை வழங்கப்பட்டவை 148 என்றும் குறிப்பிட்டார்கள். இவ்வளவு குறைவாகத் தண்டனை வழங்கப்பட்டதற்குக் காரணம் என்ன? வழக்கு பதிவு செய்யப்பட்டதிலே ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றனவா? இந்தக் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காகப் ''பறக்கும் படை'' ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்தப் பறக்கும் படைக்கு வாகன வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.